கைம்பெண் நுழைந்தால் கோயிலின் புனிதம் கெட்டுவிடுமா?

# மூடநம்பிக்கை இன்னும் தொடர்வது துரதிர்ஷ்டவசமானது!

## உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, ஆக.7-

கைம்பெண் நுழைந்தால் கோயில் புனிதம் கெட்டு விடும் என்ற மூட நம்பிக்கை இன்னும் மாநிலத்தில் நிலவுவது துரதிர்ஷ்டவசமானது என்று சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஈரோடு மாவட்டம், நம்பியூர் தாலுகா, கெட்டிசெவியூர் கிராமத்தில் உள்ள பெரிய கருப்பராயன் கோயிலில் பூசாரியாக இருந்த பொங்கியப்பன் கடந்த 2017-ம் ஆண்டு மரணம் அடைந்தார். இந்த கோயிலில் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் ஆடித்திருவிழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பூசாரி பொங்கியப்பனின் மனைவி தங்கமணி மற்றும் மகனை கோயிலுக்குள் நுழைய அந்த ஊரை சேர்ந்த அய்யாவு என்பவரும், முரளி என்பவரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தங்கமணி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்த போது, தங்கமணி தரப்பில் வழக்கறிஞர் வி.இளங்கோவன், காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.தாமோதரன் ஆகியோர் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி, கைம்பெண் கோயிலுக்குள் நுழைந்தால் புனிதம் கெட்டு விடும் என்ற என்ற மூட நம்பிக்கைகள் தமிழ்நாட்டில் இன்னும் நிலவுவது துரதிர்ஷ்டவசமானது. ஆண்கள் தங்கள் வசதிக்கேற்ப வகுத்த இந்த கோட்பாடுகள் மற்றும் விதிகளால், கணவனை இழந்த பெண்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள். சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாகரிக சமுதாயத்தில் இவையெல்லாம் தொடர அனுமதிக்க முடியாது.

மனுதாரர் தங்கமணியும், அவரது மகனும் திருவிழா மற்றும் கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்வதை தடுக்க எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. மனுதாரரை கோயிலுக்குள் நுழைய விடாமல் யாரேனும் தடுக்க முயற்சித்தால், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தங்கமணி கோயிலுக்குள் செல்வதை தடுக்கும் அய்யாவு மற்றும் முரளி ஆகியோரை சிறுவலூர் காவல் நிலைய ஆய்வாளர் அழைத்து கோயிலுக்கு வரும் தாய், மகனையும் தடுக்கக்கூடாது என்று அறிவுறுத்த வேண்டும்.

நீதிமன்ற உத்தரவுபடி வழங்கப்படும் அந்த அறிவுறுத்தலை யும் மீறி அவர்கள் இருவரும் செயல்பட்டால் சட்டத்திற்குட்பட்டு இருவர் மீதும் காவல்துறை நடவடிக்கை எடுக்கலாம். திருவிழா நடக்கக்கூடிய இரு நாட்களிலும் தாயும் மகனும் கலந்து கொள்வதை காவல்துறை உறுதிப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

---

ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி தன் ஆரோக்கிய யோஜனா

# திட்டத்தைச் செயல்படுத்தும் போது அரசாங்கம் எதிர்கொள்ளும் தடைகள்!

## மக்களவையில் காஞ்சிபுரம் எம்.பி. க.செல்வம் வினா!

புதுடெல்லி, ஆக. 7 -

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் (04-08-2023) அன்று காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் சுகாதாரத் துறையில் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தை நாட்டில் செயல்படுத்தும்போது அரசாங்கம் எதிர்கொள்ளும் தடைகள் என்ன? என்று வினா எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் அவர் எழுப்பிய வினாக்கள்.

ABPMJAY அதன் தொடக்கத்திலிருந்து செய்த சாதனைகள் என்ன? ABPMJAY இன் கீழ் நோயாளிகள் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு வகுத்துள்ள செயல்முறை மிகவும் சிக்கலானது, அப்படியானால், இது சம்பந்தமாக சரியான நடவடிக்கைகள் என்ன?

ABPMJAY இன் கீழ் வழங்கப்படும் வசதிகள் குறித்து அரசாங்கம் ஏதேனும் விழிப்புணர்வு திட்டத்தை தொடங்கியுள்ளதா மற்றும் அப்படியானால், விழிப்புணர்வு திட்டத்தின் விளைவுகள் என்ன?

குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் ABPMJAY மூலம் பயனடைந்துள்ளார்களா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட திருத்த



நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் ABPMJAY இன் கீழ் இணைக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளின் விவரங்கள் என்ன? AB PMJAY இன் முன்னேற்றம் மற்றும் செயல்படுத்தல் பற்றி விவாதிக்க அரசாங்கம் சமீபத்தில் மறுஆய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறதா?

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு தலையீடுகளுடன் கடந்த எட்டு ஆண்டுகளில் கண்டறியப்பட்ட புதிய தொழுநோய்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதா?

2030 ஆம் ஆண்டிற்குள் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை பூஜ்ஜியமாக அடைவதற்கான ஒரு மூலோபாய சாலை வரைபடத்தை அரசாங்கம் வகுத்துள்ளதா மற்றும் அப்படியானால், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இலக்கை அடைய அரசாங்கம்;

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து செய்த சாதனைகளின் விவரங்கள் மற்றும் திட்டத்தை மேலும் திறம்படச் செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள்;

நாட்டில் உள்ள தொழுநோயாளிகளின் சமூகபொருளாதார நிலைமைகளைக் கண்டறிவதற்காக அரசாங்கம் ஏதேனும் கணக்கெடுப்பை நடத்தியிருக்கிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள்;

தொழுநோயாளிகளின் பரிதாபகரமான வாழ்க்கை நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இலவச மருந்துகள் உட்பட ஏதேனும் உதவி வழங்கப்படுகிறதா அப்படியானால், அதன் விவரங்கள்?

என மேற்கண்ட கேள்விகளை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் எழுப்பினார்.

---

# தாய்மையும் கலைஞரும் ஒன்று!



தாய்மையும்
கலைஞரும்
ஒன்று

தாய் பேரன்பில்
பிள்ளைகளின் பெரும் பிழையையும்
ஏற்றுக்கொண்டு விடுவாள்

கலைஞரும் அப்படித்தான்
எதிரிகள்,
நண்பர்கள்,
மக்கள் செய்யும் பிழைகளையுமே
கூட பொறுத்துக்கொள்வார்

தாயும் கலைஞரும்
குற்றவாளிகள்தான்

சுடுமணலில் நாம் நின்றால்
செருப்பாக மாறினார்

புயலிலே சிக்கிய போது
கட்டுமரமாய் மாறி
கரை சேர்த்தார்

எளியவன் துயருற்றபோதெல்லாம்
அவனுக்கு துணை நின்றார்

மூச்சு விட சிரமப்பட்டபோது
உயிர்காற்றாய் உயிர் தந்தார்

எல்லாமே

யாரும்
கேட்காமலே

ஒரு தாயைப்போல
கலைஞரும் செய்தார்

அதனால்தானோ
என்னவோ

தாயின் அருமை பெருமை தெரியாத
தற்குறி பிள்ளைகள் போல

நாம் கலைஞரையும் அறியாமல்
போனோம்

காலம் கடந்துவிட்டது
கலைஞரும்
காற்றில் மறைந்து போனாலும்

தாயை இழந்து
இன்று
நினைத்து கதறும் பிள்ளைகளை
போல

கலைஞரை நினைத்து
கதறுது தமிழ் மக்கள் உலகு

**குளித்தலை மனோ**

---

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# திருவொற்றியூர் மேற்கில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

## பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

திருவொற்றியூர், ஆக.7

கழகத் தலைவர் ஆணையேற்று கலைஞர் நூற்றாண்டு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலில் பகுதி கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் மக்களுக்கு பயன் அளிக்கிற வகையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (05.08.2023) எர்ணாவூர் சுனாமி குடியிருப்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் தோல் நோய், மகப்பேறு மருத்துவம், சர்க்கரை நோய் நிபுணர்கள், பொது மருத்துவம், மற்றும் இரத்தப் பரிசோதனை, பொது உடல் பரிசோதனை செய்யப்பட்டு உடனடியாக அதே இடத்தில் அவர்களுக்கு தரமான மருந்துகளும் வழங்கப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் பங்கேற்று பயன் பெற்றார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், பகுதி கழக நிர்வாகிகள், அவைத்தலைவர் ந.திருசங்கு, துணை செயலாளர் யு.எஸ்.குறளரசன், பொருளாளர் எம். வஜ்ரவேல், மாவட்ட பிரதிநிதிகள் எம். சந்திரகுமார், ஜி.தினேஷ், என்.ராம்குமார், ஆர்.மோகனசுந்தரம், பொன்.கோ. விஜயன், எஸ்ஆர்.மலைராஜ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வீ. தியாகராஜன், இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், மகளிரணி அமைப்பாளர் ம.கோமளவள்ளி, வழக்கரஞரணி ஜி. சந்திரபோஸ், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், மகளிரணி வலைதள மாவட்ட பொறுப்பாளர் எஸ்.தாமரை, வழக்கறிரணி துணை அமைப்பாளர் ஹரிஹரன்,

மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் வி. கே.ஏழுமலை, வை.சின்னையன், லயன். எஸ்.இளங்கோ, ஆர்.நவக்குமார், வேலாயுதம், கஜேந்திரன், கோபால், தழுவை எஸ்.ரஞ்சித், வை. சின்னையன், பாலு பூங்கொடி, தாமரை டி.சேகர், டி.சக்கரவர்த்தி, ஆர்.நரேன்குமார், கார்த்திக், எம்.ராமு, ஆர்.மதன்குமார், சி.முத்து, ஞானசேகர், கோகுல், எஸ். பாபு, எஸ்.ராஜேஷ், மு. குணசீலன், எஸ்.வினோத், பி.வெற்றி, வெற்றிச்செல்வன், பிரகாஷ், விக்னேஷ், கார்த்திக், முனியாண்டி, லோகேஷ் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் பங்கேற்றார்கள்.

பகுதி கழக துணை செயலாளர் வழக்கறிஞர் யு.எஸ். குறளரசன் நன்றி கூறினார்.

---

முதல்வர் தலைமையில் - முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு. கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 7 -

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு -

நவீன தமிழகத்தின் சிற்பி அரசியல் வரலாற்றில் 50 ஆண்டு காலம் இயக்கத்தின் தலைவராக இருந்து நின்ற அனைத்து பொதுத்தேர்தல்களிலும் வென்று 5 முறை தமிழகத்தை ஆட்சி செய்து தமிழகத்தில் பல திட்டங்களையும் பல சாதனைகளையும் பல துறைகளையும் உருவாக்கி புரட்சி செய்திட்ட அரசியல் சித்தர். மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளான 7.8.2023 திங்கள் கிழமை காலை 8 மணி அளவில் சென்னை ஓமந்தூரார் மருத்துவமனை அருகில் இருந்து கழக தலைவர் திராவிட மாடல் முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் அமைதி ஊர்வலம் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்திட உள்ளதால் நமது மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிவிப்பிற்கிணங்க குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகி கள், இளைஞர் அணி, மகளிர் அணி மாணவர் அணியை சேர்ந்த தோழர்கள் அனைவரும் பெருமளவில் அமைதி ஊர்வலத்தில் பங்கேற்றிட வேண்டும் எனவும் அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடிக்கம்பங்கள் மற்றும் கழக நிர்வாகிகளின் இல்லங்களின் முன்பு முத்தமிழறிஞர் கலைஞரின் உருவப்படம் வைத்து மாலை அணிவித்து உலகம் போற்றும் உத்தம தலைவருக்கு புகழஞ்சலி செலுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஹைவேவிஸ் எம். மனோகரன்
### ஆகஸ்ட் 7 (2017)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர்

# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் புகழ் அஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிக்கை !

சேலம், ஆக. 7-

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி. எம். செல்வகணபதி அறிக்கை வருமாறு:-

இன்று ( 7ஆம் தேதி திங்கட் கிழமை) முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழ கத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவுநாள்.

தமிழே மூச்சாக தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வரலாற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தி, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இன்று (07.08.2023 திங்கட் கிழமை) 7.30 மணியளவில் தாரமங்கலம் நகரத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சியில் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,

பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர், துணை தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வா கிகள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரை வடக்கு மாவட்டம் வண்டியூர் 38 மற்றும் 40 வது வட்டக் கழக தி.மு.க. சார்பில் தென்னிந்திய அளவிலான மகளிர்க்கான ஏ கிரேட் மின்னொளி கபடி போட்டி பகுதிச் செயலாளர் எம்.பாண்டியராஜன், மதுரை மாநகராட்சி கொறடா சி.எம்.துரைப்பாண்டி தலைமையில் வட்டச் செயலாளர்கள் என்.வெங்கடேசன், பி.என்.குமரன், மாமன்ற உறுப்பினர் டீ.கதிரவன், செல்வ கணேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற போட்டியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் வடக்கு மாவட்ட செயலாளர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர், நேரு பாண்டியன், மண்டலத் தலைவர் வாசுகி சசிகுமார், கழக நிர்வாகிகள் பி.அழகு பாண்டி, மருது பாண்டியன், உமா சிங்கத்தேவன், வீரராகவன், வக்கீல் கலாநிதி, சாவாஸ் உசேன், மகேந்திரன், முத்தையா, மலையப்பன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.